[27th March 1965

(அ) மாவட்ட வேளாண்மை அதிகாரிகளாக நேரடியாக நியமிக்கப்பட்டவர்களுக்கும், மேல் துணைப் பணியாளர்களிலிருந்து (Upper Subordinates) பதவி உயர்வு மூலம் நியமிக்கப்பட்டவர்களுக்கும் உள்ள விகிதாச்சாரம் 1 : 5.

(இ) எண்பத்தேழு.

திரு. து. ப. அழகமுத்து : இந்தப் பதவி உயர்வு 1 : 5 என்ற முறையில் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். நேரடியாக அமர்த்துவது ஒரு பங்கு என்றால் பதவி உயர்வு மூலமாக உயர்த்துவது 5 பங்கு என்று அர்த்தமா? அல்லது இதற்கு விரோதமாகக்கொள்ள வேண்டுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் முதலிலே சொன்னதுதான்.

மாநில ஹரிஜன நலக்குழு அமைத்தல்

* 346 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ராஜ்ய ஹரிஜன சேமநல கமிட்டி அமைக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அங்கத்தினர்களின் விபரம் அடங்கிய பட்டியல் ஒன்று சபைமுன் வைக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) சபைமுன் ஓர் அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

(a) & (b) A statement [a] is placed on the Table of the House.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்த ஆலோசனைக் கமிட்டியில் 31 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். அதில் 6 அங்கத்தினர்கள் சட்டசபை முன்னாள் உறுப்பினர்கள். 11 உறுப்பினர்கள் புதியவர்கள். இது எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : கலெக்டர் அவர்கள் சிபார்சு செய்து அனுப்புகிறார்கள். ஒன்று இரண்டு பேர்களைத்தான் அரசாங்கம் போடுகிறது. மற்றவர்கள் கலெக்டர் சிபார்சின்பேரில்தான் அமர்த்தப்படுகிறார்கள்.

திரு. எஸ் முருகையன் : திராவிட முன்னேற்றக் கழகம் பிரதான எதிர்க்கட்சியாக இருந்தும்கூட, அவர்கள் சார்பில் ஒருவர் மட்டும் நியமிக்கப்பட்டிருக்கிறார். பலர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இது பாரபட்சம் அல்லவா ? இப்படி அமைக்கப்பட்ட குழுவை மாற்றி அமைப்பதற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : இது பாரபட்சமாக அமைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதிப்பிற்குரிய அங்கத்தினர் சொன்னபடி ஒன்றும் இல்லை. யார் யாரை நியமித்தால்

---

[a] Printed as Appendix on pages 319–322.

27th March 1965]

நல்லது என்று ஆலோசனை செய்து நியமிக்கப்படுகிறார்கள். இதில் கட்சியைப்பார்த்து ஒன்றும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. கலெக்டர் சிபார்சின் பேரில்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. நா. இராசாங்கம் : கனம் அமைச்சர் அவர்கள் சொல்லும் போது பாரபட்சமாக அமைக்கப்படவில்லை, கலெக்டரின் சிபார்சின் பேரில்தான் அமைக்கப்பட்டது என்று தெரிவித்தார்கள். இது உள்ளபடியே கலெக்டர் சிபார்சாக இருந்தால் நல்ல தொண்டர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புவார்கள். கலெக்டர் மீது பழியைப் போடுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கலெக்டர் பார்த்துத்தான் யார் யார் நல்ல வேலை செய்கிறார்களோ, அவர்களை சிபார்சு செய்கிறார்கள். அவர்களுடைய சிபார்சைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

திரு. ஆ. துரையரசன் : இந்த கமிட்டி போடுவதிலே எல்லா கட்சியினரையும் அழைத்து அனுபவம் வாய்ந்தவர்களைப் போட வேண்டும் என்று கலெக்டருக்கு அரசாங்கம் உத்தரவு இட்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அப்படிப்பட்ட உத்தரவு போட்டால் இன்னும் குழப்பம் தான் வரும். இப்போது அது தேவை இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்தக் குழுவிலே வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டத்திலிருந்து மூன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இப்போது சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறவர்களை நியமிக்கக் கூடாதா ?

கனம் திரு. பூ. கக்கன் : இப்போது இருக்கிறவர்களையும் நியமித்து இருக்கிறோம். சட்டமன்றத்திலே இல்லாதுபோனால், அவர்களுடைய சேவை போய்விட்டது என்ற கருத்து கூடாது. அவர்களையும் சேர்த்துப் போட்டிருக்கிறோம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இந்த ஆலோசனைக் குழுவின் காலம் எத்தனை ஆண்டுகள் ? இதை மறு பரிசீலனை செய்து புதிதாக ஆட்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : இரண்டு, மூன்று ஆண்டுகள் என்று நினைக்கிறேன். அந்தத் தகவல் என்னிடம் இல்லை. பின்னால் சொல்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, ஹரிஜன நலம் என்பது ஒரு தேசியப் பிரச்னை. எல்லா அரசியல் கட்சியினரும் அக்கறை கொண்ட பிரச்னையாக இருப்பதால், எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு செய்ய முன்வந்தால், நல்ல

[27th March 1965

வகையிலே, சீரான முறையிலே எல்லா அரசியல் கட்சி பிரதிநிதி கள் அடங்கி இருக்கிற அளவுக்கு, இந்தக் குழு திருத்தி அமைக்கப் படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கெனவே அமைத்து ஆகிவிட்டது. திருத்தி அமைக்க வேண்டியது இல்லை. மேலும் மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் சொல்வதை எல்லாம், ஆலோசனை கமிட்டி கவனித்து வேண்டியது செய்யும்.

திரு. சா. கணேசன் : இப்படிப்பட்ட ஒரு மனக்குறை இருப்ப தால் இந்தக் கமிட்டியைத் திருத்தி, பரிபூர்ண பிரதிநிதித்வம் அளிக்கிற முறையிலே, இன்னும் நல்ல சேவை செய்யக்கூடிய ஹரி ஜனத் துறையிலே சேவை செய்தவர்களை, சேர்த்துக்கொள்ளக் கூடிய முறையிலே அமைக்க உத்தேசம் உண்டா ? இல்லையென்றால் திருத்தி அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : முன்பே சொல்லிவிட்டேன். ஏற் கெனவே ஜில்லா கலெக்டருக்கு தனிப்பட்ட சில அங்கத்தினர்களை, சில பேர்களை தெரியும். அவர் பார்த்து லிஸ்ட் அனுப்பி அரசாங் கம் முடிவு செய்து விட்டது. அதன் பிறகு திருத்த வேண்டும் என்ற நிலை இல்லை என்று நினைக்கிறேன். இதைத் திருத்துவதற்கோ அல்லது புதிதாக மாற்றி அமைப்பதற்கோ வழி இல்லை என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. க. தா. பெருமாள் ராஜு : கோவை ஜில்லாவுக்கு மாத் திரம் ஏன் ஒரு பிரதிநிதி கூட இல்லை என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : கோவை ஜில்லாவுக்கு இடம் கொடுக் காமல் இருக்காது. தனிக் கேள்வி போட்டால் தகவல் சொல்ல முடியும், யார் அங்கம் வகிக்கிறார் என்று.

MR. SPEAKER : From where does the hon. Member, Sri K. P. Palanisamy come? Is he not coming from Coimbatore?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir, he represents Coimbatore district.

திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்த ஹரிஜன நல குழு எந்தெந்த பணிகளை கவனித்து வருகிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : முக்கியமாக அவர்கள் சேவை தீண் டாமை ஒழிப்பு தான். தீண்டாமையை ஒழிக்க பாடுபடுகிறார்கள். மாவட்டங்களுக்கு சென்று கூட்டம் போட்டு அந்தந்த வட்டாரங் களிலே ஏற்படுகிற குறைகளை அங்கே சென்று பரிசிலனை செய்து உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கிறார்கள். பொருளாதார துறையில் மாடு வாங்க கடன் கொடுக்கிறோம். அதெல்லாம் சரி யாக பயன்படுகிறதா என்று பரிசீலிக்கிறார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல்: அமைச்சர் சொன்ன பதிலிலிருந்து இந்தக் குழு, தீண்டாமை ஒழிப்பு போன்ற முக்கியமான பிரச்னை களில் ஈடுபட்டிருக்கிறது என்று தெரியவருகிறது. இதில் அரசியல்

27th March 1965]

சம்பந்தப்பட்ட எல்லா அரசியல் கட்சிகளும் பிரதிநிதிகளாக இருக்கவேண்டும். அரசியல் கட்சிகள் சம்பந்தம் இல்லாமல், குன்றக்குடி அடிகளார் இந்தக் குழுவில் இருக்கிறார்கள். அப்படி என்றால் அரசியல் கட்சிகள் அல்லாது, மத அடிப்படையில் குழு அமைக்கலாம் அல்லவா ?

கனம் திரு. பூ. கக்கன் : குன்றக்குடி அடிகளார் அவர்கள், மத்திய சர்க்கார் கமிட்டியில் மெம்பராக இருக்கிறார்கள். அதனால் சட்டப்படி, மத்திய சர்க்கார் கமிட்டியில் மெம்பராக இருப்பதால், இந்தக் கமிட்டியிலும் மெம்பராக இருக்கிறார்கள். இந்தக் கமிட்டியில் மெம்பர்களாக இருப்பவர்கள், ஜில்லா கமிட்டிகளிலும் மெம்பர்களாக இருப்பார்கள். ஏதோ நாங்கள் கமிட்டியை அமைத்து விட்டோம். மத அடிப்படையில் கமிட்டியை அமைக்கும் எண்ணம் இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : தற்போது உள்ள 31 அங்கத்தினரோடு சட்ட சபையிலுள்ள எல்லா கட்சித் தலைவர்களையும் 'கோ-ஆப்ட்' செய்துகொள்வதற்கு என்ன தடங்கல் இருக்க முடியும் ?

கனம் திரு. பூ. கக்கன் : தடங்கல் இருக்காது. ஒரு தரம் போட்டுவிட்டு மறுபடியும் திருத்திப் போட்டால் நல்லதில்லை என்பது என் அபிப்ராயம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, ஹரிஜன நல குழு அமைக்கப்பட்டு விட்டது, மாற்ற வழி இல்லை என்று அமைச்சர் தெரிவிக்கிறார்கள். எல்லா அரசியல் கட்சிகளும் ஈடுபடுகின்ற வகையில் இருந்தால் ஒத்துழைப்பு சரியாக நடைபெறும் என்ற நோக்கத்தை வைத்துக்கொண்டு, இனி குழு அமைக்கும் போதாவது இந்தக் கருத்து மேற்கொள்ளப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

திரு. சா. கணேசன் : இப்போதும் ஒன்றும் குறைவு வந்து விடாது. பல சேர்க்கப்படாத அரசியல் கட்சி பிரதிநிதிகளை கூட்டி இணைத்துக்கொள்வதால் நஷ்டமோ, கஷ்டமோ வராது. இந்தத் துறையிலே செம்மையாகவும், திறமையாகவும் பாரபட்சம் இல்லாமல் இருக்கிறது என்று தோற்ற பூர்வமாகவும் அமைவதற்கு, பிற கட்சிகளின் 4 அல்லது 6 பேர்களை இதோடு சேர்த்துக்கொள்வதில் கஷ்டம் இராது. இதை அரசாங்கம் யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இந்த கமிட்டியிலே அரசியல் கட்சிகளை புகுத்தக் கூடாது. மதிப்பிற்குரிய அங்கத்தினர் எண்ணம் அப்படி என்றால் பொதுவாக சேவை மனப்பான்மை அடிப்படையில் அமைக்கப்படுகிறது. ஹரிஜன சேவைக்காக—இம்மாதிரி அரசியல் கட்சிக்களுக்காக அல்ல—அவர்கள் பணி செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. து. ப. அழகமுத்து : அமைக்கப்பட்டுள்ள இந்த கமிட்டியில் கலெக்டர் சிபார்சு செய்தவர்களில் ஒன்று, இரண்டு மாற்றி இருக்கிறது என்று அமைச்சர் கூறினர்கள். எத்தனை பேர்களை சர்க்கார் தன் இஷ்டத்திற்கு மாற்றி இருக்கிறது என்று அறிய லாமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை. ஒன்றிரண்டு மாற்றி இருக்கலாம்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நில ஆர்ஜிதம் செய்வதில் ஏற்படக்கூடிய கால தாமதத்தை இந்தக் குழு பரிசீலித்ததா ? ஏதாவது கருத்தைத் தெரிவித்து இருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்த மாதிரி கூட்டத்தில் கவனத்திற்கு வந்தால், தனிப்பட்ட அங்கத்தினர்கள், அட்வைசரி கமிட்டி மெம்பர்கள் எடுத்துச் சொன்னுல், கலெக்டர் பரிசீலனை செய்வார்கள்.

திரு. ம. கமலநாதன் : மாவட்ட ரீதியிலும் சரி, ஹரிஜன் ஹாஸ்டல் கமிட்டியிலும் சரி, நியமிக்கக்கூடிய உறுப்பினர்களின் பதவிக் காலம் 3 ஆண்டுகளாக இருப்பதால் எம்.எல்.ஏ-க்களின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாக இருப்பதால், தொடர்ந்து 2 ஆண்டுகள் பதவியில் இல்லாத எம்.எல்.ஏ.-க்கள் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. தொகுதியில் இருக்கக் கூடிய எம்.எல்.ஏ.-க்களாக இருக்க வேண்டும் என்று விதிகள் அமைத்தால் எக்ஸ்-எம்.எல்ஏ-க்களைப் போடுவதற்கு வழி இருக்காது. இப்போதுள்ள எம்.எல்.ஏ.-க்கள் தொடர்ந்து இருக்க முடியும். அதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஜில்லா கமிட்டி கூட்டத்திற்கு அங்கு இருக்கிற எம்.எல்.ஏ.-க்கள் போகலாம். அங்கத்தினர் சொன்ன மாதிரி ஏற்பாடு வேண்டாமென்று நினைக்கிறேன்.

திரு. சா. கணேசன் : அரசியல் கட்சி கண்ணேட்டத்தோடு உறுப்பினர்கள் அமைக்கப்படவில்லை என்று கனம் அமைச்சர் கூறினர்கள். இந்த லிஸ்டைப் படித்துக்கொண்டு வருகிறபோது, மற்றவர்களுக்கு எல்லாம் அவரவர் உத்தியோகப் பெயர், தபால் விலாசம் அமைந்து இருக்கிறது. ஆனல் 'சி. ராமசாமி முதலியார், தலைவர், மாவட்ட காங்கிரஸ் கமிட்டி, செங்கற்பட்டு' என்று போட்டு இருக்கிறது. இவர் நிலச்சுவான்தார்; பெரிய தொழில், வியாபாரம் எல்லாம் இருக்கிறது வீட்டு நம்பர் இருக்கிறது. அதைப் போடலாம். இப்படிப் போட்டதிலிருந்து அரசியல் கண்ணேட்டத்தோடு போடவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலை இருப்பதால், இனிமேலாவது பொதுவான நிலையில் இருக்கும்படி அமைக்க அரசாங்கம் செயற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அவர் அட்ரஸ் கொடுத்ததை வைத்துக்கொண்டு கலெக்டர் போட்டிருக்கிறுர்கள். அரசியல் கண்ணேட்டத்தோடு கமிட்டி அமைக்கவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.